செ.வெ.எண்:56/2018 நாள்:24.05.2018

**மனு நீதி நாள் முகாமில் 472 பயனாளிகளுக்கு ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மக்களின் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் ஆட்சி புரியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். அனைவரும் பெற்று பயன்பெற வேண்டுமென மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் தகவல். !!!**





சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், தமறாக்கி கிராமத்தில் இன்று (24.05.2018) மனு நீதி நாள் முகாம் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில்,

தமிழக அரசானது மக்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, அரசை தேடி மக்கள் என்ற நிலைமாறி, மக்களை தேடி மாவட்ட நிர்வாகம் என்ற உன்னத நிலையை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. தமிழக அரசின் நலத்திட்டங்களை பொதுமக்கள் மேன்மேலும் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்துத்துறை அரசு முதன்மை அலுவலர்களை கொண்டு மனுநீதி நாள் முகாம் மாதம் ஒருமுறை மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் தோறும் நடைபெறுகிறது. இம்முகாமில், தமிழக அரசால் அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் தனிமனிதன் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகிறது. குறிப்பாக, பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்றைக்கு மனுநீதி நாள் முகாமிற்கென சிவகங்கை வட்டம், தமறாக்கி ஊராட்சி அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களிடமிருந்து, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏற்கனவே பெறப்பட்ட 650 மனுக்களில் தகுதியுடைய மனுதாரர்களுக்கு உடனடி தீர்வு மூலம் இன்று 472 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் மீது உரிய நடவடிக்கை தொடர்பாக தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், மனுநீதி நாள் முகாமின் நோக்கம் கிராமப் பகுதியில் பொதுமக்களின் தேவையை அறிந்து உடனுக்குடன் நிறைவேற்றுவதே ஆகும். இதனை இப்பகுதியில் உள்ள பொதுமக்களும் கருத்தில் கொண்டு, ஒவ்வொருவரின் வளர்ச்சி மட்டுமின்றி ஊரின் வளர்ச்சிக்கும் இதுபோன்ற முகாம் மிக பயனுள்ளதாக இருக்கும் மற்றும் ஒரு கிராமம் முழுமையாக வளர்ச்சி பெற வேண்டுமென்றால் அங்கு எவ்வித பாகுபாடுடின்றி ஒன்று கூடி திட்டங்கள் தீட்டி செயல்பட்டால் அங்கு முழுமையான வளர்ச்சியை பெறமுடியும். அந்த வகையில் கிராம மக்கள் ஒன்று கூடி செயல்பட்டு சிறந்த முன்னேற்றத்தை பெற்று பயன்பெற வேண்டும்.

பொதுவாக கல்வி என்பது மிக அவசியமான ஒன்றாகும். அதில் ஆண், பெண் என்று பாராமல் இருபாலரும் உயர்கல்வி வரை படித்து பெரிய பதவிகளை பெற்று தங்களுக்கு மட்டுமின்றி பெற்றோர்களுக்கும் பெருமை தேடித்தர வேண்டும். அதேபோல் கிராமத்திலுள்ள பெண்கள் கூட்டாக சேர்ந்து சுயஉதவிக் குழுக்கள் அமைத்து தொழில் பயிற்சி பெற்று நகர்ப்பகுதியில் கூட்டுத் தொழில் அமைத்து பொருளாதார முன்னேற்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், ஊராட்சிகளுக்கு தேவையான குடிநீர், சாலை வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதுடன் மேலும் ஊராட்சியின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களையும் கேட்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பகுதியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் சுழல்நிதி கடன் வழங்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த மகளிர் குழு சிறந்து செயல்படுவது போல் மற்றக் குழுக்களும் சிறப்பாக செயல்படுவதுடன் ஒவ்வொரு குழுவும் வங்கியில் வாங்கும் கடனை முறையாகச் செலுத்தும் பொழுது வங்கிகள் தானாக முன்வந்து மற்ற குழுக்களுக்கும் எளிதாக கடன் கொடுப்பதுடன் பரிந்துரை செய்யும் எங்களைப் போன்றோருக்கு இதன் மூலம் பெருமைப்படுத்தப்படுகின்றன. அதேபோல் உப்பாறு பகுதியில் ரூ.1 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி நடைபெறவுள்ளன. மேலும் கொட்டகுடி கால்வாயில் சீரமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இப்பகுதியில் கிராம சேவை மையம் கட்டிடம் கட்டப்பட்டு மகளிர் சுயஉதவிக் குழு மூலம் இணையதளம் வழியாக பொதுமக்களுக்கு தேவையான சான்றிதழ் விண்ணப்பம் பெறப்பட்டு வழங்கும் வகையில் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் தங்கள் தேவைக்கு ஏற்ப சான்றிதழ் பெற கிராம சேவை மைய அலுவலகத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதுபோல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களும் ஆகியோர் தலைமையில் பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் நல்லமுறையில் பயன்படுத்தி தங்களின் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். கடைக்கோடி கிராமத்தில் பிறந்து வளர்ந்த என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி மந்திரிப் பதவியும் வழங்கி அழகு பார்த்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றிக் கடன் பட்டுள்ளேன். அதேபோல் நான் அமைச்சராக இருக்கும் பொழுது சிறப்புடன் செயல்பட்டு மாவட்டத்திற்கு தேவையான வளர்ச்சி திட்டங்களை உருவாக்குவதுடன் கிராமப் பகுதி மக்களின் தேவையை முழுமையாக நிறைவேற்ற பாடுபடுவேன் அதுமட்டுமின்றி உங்களின் கோரிக்கைகளை என்னிடம் நேரில் சந்தித்து கொடுத்தாலும் சரி இல்லாவிட்டால் எனது அலுவலகம் சிவகங்கை ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ளது. அங்கு மனுவை அளிக்கலாம். அனைத்து மனுவையும் பார்த்து உரிய தீர்வுகளை வழங்க அலுவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். என்றென்றும் உங்களுக்கு உறுதுணையாக நான் இருப்பேன் என மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் தமறாக்கி ஊராட்சியில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட கிராம சேவை மையக் கட்டடத்தை திறந்து வைத்ததுடன் அதே பகுதியில் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் பொது சேவை மையக் கட்டடத்தை மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மக்கள் தொடர்பு முகாம் அரங்கில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டதுடன் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சி மற்றும் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தில்

அரசின் சாதனைகள் குறித்த திரையிடப்பட்ட படக்காட்சியினை மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

பின்னர் வருவாய்த்துறையின் மூலம் 63 பயனாளிகளுக்கு ரூ.2,39,000/- மதிப்பீட்டில் முதியோர் உதவித் தொகை மற்றும் பட்டா மாறுதல் ஆணைகளையும், மகளிர் திட்டத்தின் மூலம் 21 பயனாளிகளுக்கு ரூ.18,60,000/- மதிப்பீட்டில் சுழல்நிதி கடனும், தொழிலாளர் நலத்துறையின் மூலம் 56 பயனாளிகளுக்கு உறுப்பினர் வாரிய பதிவு அட்டையும் மற்றும் ரூ.2,000/- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவியும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் தலா 4 பயனாளிகளுக்கு ரூ.17,200/- மதிப்பீட்டில் விலையில்லா தையல் இயந்திரங்களும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் 156 பயனாளிகளுக்கு ரூ.1,37,25,000/- மதிப்பீட்டில் தொழிற்கடன், சிறு வணிகக் கடன்களும், மாவட்ட முன்னோடி வங்கி மூலம் 77 பயனாளிகளுக்கு ரூ.99,90,000/- மதிப்பீட்டில் சிறு வணிகக் கடன் மற்றும் கறவைமாடு வழங்குவதற்கான நலத்திட்ட உதவிகளும், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு ரூ.14,881/- மதிப்பீட்டில் சக்கரநாற்காலி மற்றும் தேசிய ஆதார அட்டை போன்ற நலத்திட்ட உதவிகளும், வேளாண்மைத்துறையின் மூலம் 20 பயனாளிகளுக்கு ரூ.71,763/- மதிப்பீட்டில் வேளாண் இடுபொருட்களும், மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 20 பயனாளிகளுக்கு ரூ.1,92,000/- மதிப்பீட்டில் பசுமை வீடு மற்றும் தனிநபர் கழிப்பறை கட்டுவதற்கான ஆணைகளையும், பொது சுகாதாரத்துறையின் மூலம் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டத்தில் 6 பயனாளிகளுக்கு ரூ.24,000/- மதிப்பீட்டில் நலத்திட்டங்களையும், தோட்டக்கலைத்துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு ரூ.35,910/- மதிப்பீட்டில் வேளாண் இடுபொருட்களும், ஆதிதிராவிடர் நலத்துறையின் 2 பயனாளிகளுக்கு ரூ.7,000/- மதிப்பீட்டில் 2 விலையில்லா தையல் இயந்திரங்களும், மாவட்ட சமூகநலத் துறையின் மூலம் 26 பயனாளிகளுக்கு ரூ.50,000/- நலத்திட்ட உதவிகளையும் என மொத்தம் 472 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 62 இலட்சத்து 28 ஆயிரத்து 554 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வடிவேல், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.செல்வகுமாரி, சமூகப் பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.விஜயன், வட்டாட்சியர் திரு.கந்தசாமி மற்றும் முக்கிய பிரமுகர்கள் திரு.சந்திரன், திரு.அய்யனார், வழக்கறிஞர் திரு.பாண்டி, திரு.சசி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு:: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.